Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ ஐப்பசி மீ 25 உ ஞாயிற்றுக்கிழமை (11-11-1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 22 ஓசை 257

## பேச்சு நடத்த அதிகாரிகள் கொழும்பு செல்ல ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது நிலவும் மருந்துப் பொருள்களின் பற்றாக்குறை, எரிபொருள்கள் ஏனைய மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை போன்ற விடயங்கள் பற்றி சுகாதார அமைச்சுடன் பேசுவதற்காக வைத்திய அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பிற்குப் புறப்படவிருக்கிறது. இந்த வைத்தியசாலையில் தற்போது (4ஆம் பக்கம் பார்க்க)

## தாயக மண்ணில் இருந்து வெளிநாட்டிற்கு

# குடும்பத்துடன் செல்வோருக்கு

# புலிகள் வேண்டுகோள்

(கோண்டாவில்)

எமது சமூகத்திற்கு இன்று ஆற்றவேண்டிய கடமைகளை மறந்து வெளிநாடு செல்பவர்கள் போர்க்காலத் தேவையைக் கருத்திற்கொண்டு வீடுகளையும் விவசாய நிலங்களையும் தற்காலிகமாக எம்மிடம் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

சிறிலங்கா ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் எமது விடுதலைப் போராட்டத்தை பலவீனமடையச் செய்வதற்கு சிறிலங்காவின் படைகள் தமிழ் மக்கள் மீது முன்னென்றுமில்லாதளவிற்கு தமது முழு அளவிலான தாக்குதல்களை இன்று தீவிரப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக கடற்பகுதிகளை அண்டி வாழ்பவர்களும் யுத்த முனைகளை அண்டி வாழ்பவர்களும் தமது வீடுகள் நிலங்களை இழந்து அகதிகளாக இடம்பெயர்கின்றனர்.

இவர்கள் மட்டுமின்றி மக்கள் குடியிருப்புக்கள் மீது அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த விமானங்களின் குண்டுவீச்சின் மூலமும், ஷெல் தாக்குதல் மூலமும், கடற்படையினரின் கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்களினாலும் பலர் தமது வீடுகளையும், சொத்துக்களையும் இழந்து தவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக தொடரும் இராணுவ நடவடிக்கைகளில் உச்ச நடவடிக்கையான பாரிய விமானக் குண்டு வீச்சினால் கோட்டையை அண்மித்த பகுதிகளிலும், பலாலியை அண்மித்த பகுதிகளான கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான், மயிலிட்டி, மாவிட்டபுரம், ஏழாலை, தெல்லிப்பழை, காங்கேசன்துறை ஆகிய இடங்களிலும், காரைநகர் கடற்படை முகாமை அண்மித்த பகுதிகளிலும், தீவுப் பகுதிகளிலும் (4ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் காலை இழந்தார்

(மண்டைதீவு)

மண்டைதீவுக் கடற்கரை ஓரத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் வைத்துச் சென்ற மிதிவெடியில் சிக்கிய இளைஞர் ஒருவர் தனது இடது காலை இழந்துள்ளார்.

நேற்றுக்காலை கடற்கரையோரமாகச் சென்று கொண்டிருந்த கொட்டடியைச் சேர்ந்த ந.ரதீஸ் (வயது 16) என்ற இளைஞரே மேற்படி விபத்தில் காலையிழந்துள்ளார். (க)

## தொடர்ச்சியான ஷெல்தாக்குதல்

(தெல்லிப்பளை)

நேற்றுமாலை 5 மணிமுதல் மாவிட்டபுரம், காங்கேசன்துறை சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து மக்கள் வாழும் குடிமனைகளை நோக்கித் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சேதவிபரங்கள் பற்றித் தெரியவில்லை. (ச)

## மாவீரர் தின கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நினைவு நாளன்று நடைபெற உள்ள நிகழ்ச்சிநிரல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அத்தியடி சனசமூக நிலையத்தில் நடைபெற உள்ளதால் இன்று ஞாயிறு (11.11.90) மாலை 5.00 மணிக்கு அத்தியடி வாழ் பொதுமக்களையும், இளைஞர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## இருஷ்ணானந்தன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பொருளியலாளர் திரு. நா. கிருஷ்ணானந்தன் நினைவுப் பேருரையும், புத்தக வெளியீட்டு விழாவும் நாளை 12ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## காரியாலயத்தில் சந்திக்கவும்

தமிழீழ மாவீரர்தின விழா சம்பந்தமாகவும், தற்போதைய போக்குவரத்து விடயமாகவும் கலந்துரையாட வேண்டியுள்ளதால் சகல பஞ்சாயத்து சபைகள், சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், உப தலைவர், செயலாளர் ஆகியோரை முத்திரைச்சந்தை (4 ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் இருந்து புங்குடுதீவிற்கு ஷெல் வீச்சு!

(புங்குடுதீவு)

நயினாதீவு கடற்படை முகாமில் இருந்து தற்போது புங்குடுதீவுப் பகுதியை நோக்கி இனசரி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டு வருகின்றது. மேற்படி முகாமில் இருந்து தினமும் இரண்டு அல்லது மூன்று ஷெல்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

## திங்கள் முதல் இளினிக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக்குகள் நாளை திங்கட்கிழமை 12 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். காலை 8 மணி முதல் 12 மணிவரையும் பிற்பகல் 1 மணி தொடக்கம் 3 மணி வரையும் கிளினிக்குகள் நடைபெறும்.

## சூழலுக்கேற்ற விதத்தில் கல்வி அமைய வேண்டும்

\- சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

சூழல், ஆற்றல், சமூகத்தின் தேவை என்பவற்றிற்கேற்ப கல்வி அமைய வேண்டும். எமது சூழல் மாறும்போது கல்விமுறை, கற்றல் முறை, கற்பித்தல் முறை என்பனவும் மாறவேண்டும்.

இவ்வாறு நேற்று வேம்படி மகளிர் பாடசாலையில் நடைபெற்ற தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான் (4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு அகதிகளுக்கு அமெரிக்கா உதவ விருப்பம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நடைபெறும் மோதல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டு அகதிகளாகவுள்ள மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு தமது அரசாங்கம் விரும்புவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சைச்சேர்ந்த தூதுக்குழுஒன்று சமூக நலத்துறை அமைச்சரைச் சந்தித்தபோதே இவ்வாறு தமது விருப்பத்தைத் தெரிவித்தது.

வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டு அகதிகளாகவுள்ள மக்களுக்கு எவ்வாறு அமெரிக்கா உதவுகிறதோ அதே (4ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுப் படகுப் பயணிகள் மீது கடற்படை துப்பாக்கிப் பிரயோகம்

(புங்குடுதீவு)

படகில் பயணஞ் செய்த பொதுமக்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயங்களுடன் நீரில் மூழ்கிக் காணாமற் போயுள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

நேற்றைய தினம் நெடுந்தீவில் இருந்துவந்த படகில் பயணஞ் செய்த ஐந்து பொதுமக்கள்மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகஞ் செய்ததில் புங்குடுதீவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் தியாகராசா (46) என்பவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

இவரது சடலம் நேற்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிவளாகக்குண்டுவீச்சு அரசின் நாகரிகமற்ற செயல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தைச் சூழவுள்ள பிரதேசத்தை இராணுவ சூன்யமான பிரதேசம் எனப் பிரகடனப் படுத்திய பிறகும், இருமுறை பாதுகாப்பு வலயத்தில் விமானத் தாக்குதல் மேற்கொண்ட அரசாங்கத்தின் செயல், அரசியல் அநாகரிகமானதும், மனிதநேயத்துக்கு முரணானதுமாகும் - இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. (4ஆம் பக்கம் பார்க்க)

## அறிமுக அட்டை இன்றி வண்டி செலுத்தத் தடை

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சேவையில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிச்சாரதிகள் வரும் 20 ஆம் திகதியின் பின் முச்சக்கர மோட்டார் வண்டி ஊழியர் சங்கத்தினரால் வழங்கப்பட்ட அறிமுகஅட்டையின்றி வண்டியைச்செலுத்த தடைசெய்யப்பட்டுள்ளது என மேற்படி சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். மீறுவோர் மீது சங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடமைக்கு சமுகம் கொடுக்கவும்; இல்லையேல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் கடமைக்குச் சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். சமுகமளிக்கத்தவறும் ஊழியர்கள் மேல் ஒழுக்காற்று நடவடிக்கைஎடுக்கப்படும் என யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## வீரமரணம்

### வல்லவன்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் வல்லவன் (சுப்பிரமணியம் அருளானந்தன், இணுவில்) என்ற போராளி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்
### DILKA WATCH WORKS

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத் தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத் துடன் திருத்திக் கொடுக்கப் படும். சகல எலக்ரோனிக் பத்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

### "பூனைக்காக வாழும் பூவை"

மீரா வெளியீடு "குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பெண்ணொருத்தியின் புனிதமான வாழ்வைச் சித்தரிக்கும் கதை" துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணி தம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தக சாலை நல்லூர். R/810

### கல்வி

G.C.E(O.L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தொடர் வகுப்புக்கள் மூலம் 20 நாட்களிலிருந்து ஒரு மாதத்திற்குள் சாதாரண, திறமைச் சித்திக்கும், ஒரு மாதத்திலிருந்து ஒன்றரை மாதத்திற்குள் விசேட, திறமைச் சித்திக்கும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. R. 821

### காணவில்லை

பள்ளிக்குடாவில் அகதியாக இருந்த போது குருநகரை பிறப்பிடமாகக் கொண்ட வி உதயன் என்பவர் காணாமல் போய் விட்டார். இவர் சித்தசுயாதீனமற்றவர். இவரைக் கண்டால் பள்ளிக்குடா பூநகரி கடற்றொழில் சங்கத்திற்கு அறிவிக்கவும்.
தகவல்:- சின்னத்தம்பி. R. 822

### தவறி விட்டது

அஜித்ஸ்ரீடன் சுராஜ்டேவிற் (சுரேஷ்) சுருவில் வீதி, கரம்பொன் தெற்கு, ஊர்காவற்துறை என்ற விலாசம் உடைய அடையாள அட்டை யாழ். போதனா வைத்தியசாலைக்கும் சில்லாலைக்கும் இடையில் தவறி விட்டது. இதை கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (R 823)

### கலைப்பீடம்
### பொதுக்கலைமாணிப் பரீட்சை - 1989

மேற்படி பயிற்சி நெறிக்கான மாணவர்கள் புவியியலுக்கான தமது ஆய்வுக் கட்டுரையை 20-11-1990 க்கு முன்பாக பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும்.

காலதாமதமாக சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்
பரீட்சைக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்,
1990 - 11 - 08
(B/ 1578)


## அவனியில் நிமிர்ந்து நிற்போம்

இன்னமும் சொத்து சண்டை
எங்கள் மண்ணிலே
கொஞ்சமும் சிந்திக்க வில்லை
எங்கள் சூழ்நிலை

சட்டியில் இருக்கும் நண்டு
மகிழ்ந்து வாழுதாம்
சட்டென நீந்தி விளையாடுவது
குளத்தின் நினைபபிலே

பற்றிய நெருப்பால் நீரும்
கொதிக்க தொடங்கவே
சற்றுமே எதிர்பாராத நண்டு
வெந்து சாகுதாம்

இந்நிலை எந்நாளும் வரக்கூடாது
தமிழன் வாழ்விலே
என்றிங்கு போர்க்கொடி தூக்கி
அண்ணன் முன்னே செல்கிறார்

நண்பரே வாரும் நாளை நாமும்
நண்டின் நிலை யின்றி
அண்ணனின் படையில் சேர்ந்து
அவனியில் நிமிர்ந்து நிற்போம்.

-பைப்

அரசாங்க அதிபரால்

## ஸ்கந்தபுரம் அகதிமுகாம் பொறுப்பேற்கப்படும்

(கிளிநொச்சி)

பாதிப்புற்றோர் பாதுகாப்பு மையத்தால் ஸ்கந்தபுரம் கரும்பு ஆலையில் நடாத்தப்பட்டு வந்த அகதிமுகாமை கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பொறுப்பேற்று அரசாங்கச் செலவில் நடாத்தத்திட்டமிட்டுள்ளார்.

இரு நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட அகதிக்குடும்பங்கள் இருந்து வந்த இம்முகாமில் தற்போது நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் இருந்து வருகின்றன.

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இந்த அகதி முகாமில் அகதிகள் தொடர்ந்து தங்கி இருக்கக் கூடிய வசதிகள் இல்லாததால், அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பொறுப்பேற்று அரசாங்க செலவில் இரணைமடுவிலுள்ள வசதியான கட்டடம் ஒன்றில் இந்த அகதி முகாமை நடாத்தத் திட்டமிட்டுள்ளார். (49)

## விசர்நாய்கடி அதிகரிப்பு; மருந்து பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் தற்போது விசர்நாய் கடிக்குட்படுபவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. ஆனால் விசர்நாய் கடித்தடுப்பு மருந்து (ஏ ஆர். வி) பெரும் பற்றாக் குறையாகவுள்ளது.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் ஒரு குடும்பத்தில் தாய்க்கும், இரு குழந்தைகளுக்கும், அயல் வீட்டில் வேறு இருவருக்கும் விசர்நாய் கடித்துள்ளது. இதே தினம் கிளிநொச்சியில் இரண்டு பேரும், யாழ்ப்பாணத்தில் ஐந்து பேரும் விசர் நாய் கடிக்குள்ளானார்கள்.

அண்மைக் காலங்களில் இவ்வாறு விசர் நாய் கடிக்குட்பட்ட பலர் மரணமடைந்துள்ளதுடன், தடுப்பு மருந்து இன்மையால் பலர் அவதிப்படுகின்றனர். (க)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வுநிறுவனமும், யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளன.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் தீவகம் ஆகியபகுதிகளில் இக் கண்காட்சி இடம் பெறும். அத்துடன் உள்ளூர் பொருளாதாரத்தின் சிறப்புகளை சகல துறைகளின் ஊடாகவும் வெளிப்படுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சியில் தமிழீழ பொருளாதாரத்தின் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் உள்ள தமிழீழ தேசாபிமானிகளையும் நிறுவனங்களையும்கலந்து கொள்ள அழைப்பு விடப் பட்டுள்ளது.

மேலும் இக் கண்காட்சியில் பங்குகொண்டு காட்சியறைகளை அமைக்க விரும்புவோரை இம்மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் வேண்டிக் கொள்கிறது. (க)

## தையல் கைப்பணி பயிற்சிகள்

(திருநெல்வேலி)

விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் தையல், கைப்பணிப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சிபெற விரும்புபவர்கள் அலுவலக நேரங்களில் மேற்படி பாடசாலைக்குச் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க)

## கொத்தணி மூலம் அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இளைப்பாறும் ஆசிரியர்கள் தங்களின் இளைப்பாறுவதற்கான விண்ணப்பங்களைக் கொத்தணிப் பாடசாலையின் ஊடாகக் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கே அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு பிராந்தியக்கல்விப்பணிப்பாளர்பணிப்புரை வழங்கியுள்ளார்.

கடந்த காலங்களில் இவ் விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டன. (க)

இருபதாம் திகதிக்குள்

## சந்திரசேகர் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்

(டில்லி)

ஜனதா தள சோசலிஸ்ற் தலைவர் சந்திரசேகர் பதவிப்பிரமாணம் செய்யும் அதேவேளை இம் மாதம் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக சந்திரசேகர் மக்கள் அவையில் தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டுமென்று குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவரைக் கேட்டுள்ளார்.

## ஆட்சியமைக்கும் கொள்கையற்ற சந்திரசேகர் கூட்டணி

### - ஜோதி பாசு

(டில்லி)

ஜனதா தள சோசலிஸ்ற் தலைவர் அமைக்கவிருக்கும் அரசாங்கம் தொடர்பாக மேற்குவங்காள முதலமைச்சர் ஜோதிபாசு கருத்து வெளியிடுகையில், சந்திரசேகர் ஆட்சி கொள்கை அற்ற கூட்டணி என்றும், அது நெடுங்காலம் நீடிக்காது என்றும் கூறினார். ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது பாரதீய ஜனதாக்கட்சி எதிர்க்கட்சியாகச் செயற்படும் என்றார் பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் அத்வானி.

சந்திரசேகர் தனது அரசாங்கம், ஒதுக்கப்பட்டவர்கள் நன்மைகருதும் சித்தாந்த மற்ற சோசலிஸ்ற் முறை. சிறுபான்மையினரின் நலன்களும்கருத்திற் கொள்ளப்படும் என்றார்.

## மாவீரர் தினத்தை ஒட்டி கலையரங்கம்

(பூநகரி)

மாவீரர் தினத்தை முன்னிட்டு பூநகரி பள்ளமடு பிரதேசமான முழங்காவிலில் வீரமரணமடைந்த போராளிகளின் நினைவாக கலையரங்கம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கலையரங்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்று திறந்து வைக்கப் படவுள்ளது. (71)

## வாசல்களில் திருக்குறள்

(யாழ்ப்பாணம்)

புதிதாக ஐந்து மாத இடைவெளியின் பின் புதுப் பொலிவுடன் ஆரம்பித்துள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் தலைவாசல் பகுதி உட்பட பல பிரிவுகளுக்கும் போகும் வாசல் பகுதிகளில் திருக்குறள் வாசகங்கள்பொருத்தப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவின் முதல் வாயிலில் "அகரமுதல எழுத்தெல்லாம்" என்ற தலைகுறள் பலகையில் எழுதப்பட்டு உயரே தொங்கவிடப்பட்டுள்ளது புதிய பொலிவை கொடுத்துள்ளது. (லோ)

## இடமாற்றம்

(கொழும்புத்துறை)

இது வரை காலமும் மயிலிட்டி, காங்கேசன்துறையில் இயங்கிவந்த கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் இராணுவப் போர் நடவடிக்கைகள் காரணமாக "வசந்த மாளிகை", ஐயனார் வீதி, சுன்னாகம் என்ற தனியார் இல்லத்தில் தற்காலிகமாக இயங்கி வருவதாக மேற்படி அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (24)

## பலமான ஷெல் தாக்குதல்

(பலாலி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் காலை வயாவிளான்பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை. (க)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் சரத்பாபு
### (நாகராஜேஸ்வரன் சயந்தசிறி)

ஜனனம்: 03 - 07 - 1968
வீரமரணம்: 11 - 11 - 1988

ஈராண்டு சென்றாலும்
நீ செய்த தியாகத்தை உன்னவர்கள்
ஏந்திவிட்டார்கள்
நீ விட்ட சபதத்தை
உன்னவர்கள் ஏற்றுவிட்டார்கள்

- நண்பர்கள்

(B- 1577)

### சிந்தனைக்கு

உயிரோடு உள்ளவர்க்கு நாம் உரித்தாக்குவது மரியாதை; இறந்தோருக்கு காணிக்கை ஆக்கவேண்டியது வாய்மையன்றி வேறில்லை

— வால்டேயர்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 11-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## வரலாற்றில் நிலைக்கும் மண்ணின் செல்வங்கள்

மாவீரர் தினம், எமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தம்முயிர் தந்த போராளிகளின் நினைவு நாள். இந்த மாவீரர் தின நிகழ்ச்சிகள் இம்மாதம் இருபத்திமூன்றாம் திகதியில் இருந்து இருபத்தியேழாம் திகதி வரை தமிழீழம் எங்கும் கொண்டாடப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினரான சங்கர் (சத்தியநாதன்) 1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தியேழாம் திகதி, தமிழீழ விடுதலைக்காக தனது இன்னுயிரை ஈந்தார். இந்த நாள் தமிழீழ விடுதலைப் போரின் ஒருமைல் கல்லாகும். இந்த நாளினை அவரைத் தொடர்ந்து விடுதலைக்காகத் தம்முயிரை ஈந்த ஓராயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளின் நினைவு நாளாக, மாவீரர்களாக நாளாகப் பிரகடனப்படுத்துவது பொருத்தப்பாடு உடையதே.

'இந்த மாவீரர் தினம் ஒரு களியாட்டத்திற்குரிய நாளல்ல. அதேவேளை சோகம் ததும்பிய நாளும் அல்ல.' அந்நிய எமது மண்ணினதும் மக்களினதும் சுதந்திரத்திற்காக தமது உயிரைத் தியாகம் செய்த வீர வேங்கைகளை மக்கள் நினைவு கூர்வதோடும், அஞ்சலி செலுத்துவதோடும், தமது சுதந்திர எழுச்சியை வெளிக்காட்டும் நாளும் ஆகும்.

அடிமைத் தளையில் இருந்து மீண்டு சுதந்திரம் பெறுவதென்பது இலகுவான காரியமல்ல. அந்தச் சுதந்திரத்திற்காகப் பல களப்பலிகளைக் கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளோம். அந்தக் களப்பலிகளுக்குத் தாமாகவே முன்வந்து தம்மை அர்ப்பணிப்பவர்கள்தான் போராளிகள்.

யாரோ ஒருவரது மரத்தை வேறுயாரவது தறித்தால், அதில் விறகு வேண்டும் என்று விரும்பும் மனிதர்கள் இடத்தில் இருந்து, தமது சந்ததியினரின் விடிவிற்காக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் பணயம் வைத்து போராட முன்வருபவர்கள்தான் இந்தச் சுதந்திரப் போராளிகள்.

ஒரு போராளி தனது நாட்டின் அல்லது இனத்தின் விடுதலையைத் தவிர வேறு எதனையும் பெரிதாக எண்ணாதவன். தமது மக்களின் சுதந்திரமே ஏனைய எல்லாவற்றையும் விட கூர்மையான பிரச்சினையாக அவன் கருதுவதனாலேயே அவனது செயற்பாடுகள் போராட்டம் நோக்கித் திரும்புகின்றது. சுதந்திரத்தைவிட வேறு விடயங்கள் கூர்மையானதாக இருந்திருப்பின் அவனது சிந்தனை போராட்டம் நோக்கித் திரும்பியிருக்காது.

போராடப் புறப்படும் போதே தனது சாவையும் எதிர்பார்த்து — பெரும்பாலும் நிச்சயப்படுத்திக்கொண்டே புறப்படுகின்றார்கள். அவர்களின் போர்க் குரலாக சுதந்திரம் ஒன்றே ஒலிக்கின்றது. தமது மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிப் பலியாவதும் அவர்கள் வாழ்க்கையின் வெற்றி என்றே கருதுகின்றார்கள்.

விடுதலைப் போராளிகளின் சாம்பல்மேட்டில் இருந்து தான் ஒரு நாட்டின், அல்லது இனத்தின் சுதந்திரம் பிறக்கின்றது. இது தமிழீழத்திற்கு மட்டும் பொருத்தப்பாடு உடையதல்ல. அடக்குமுறையில் இருந்து விடுதலை பெற்ற, பெறப்போராடும் சகலருக்கும் பொருந்தும். அதாவது ஒரு இனத்தின் அல்லது நாட்டுமக்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழவேண்டுமானால், போராளிகள் துன்பமும், தியாகமும் செய்யவேண்டியுள்ளது.

மக்களின் நல்வாழ்விற்காக தங்களைத் தியாகம் செய்யும் போராளிகளை மக்கள் எப்பொழுதும் நினைவு கூர்தல் வேண்டும். போராளிகள் எவரும் தங்கள் தியாகங்களுக்காக மக்களிடம் இருந்து பணமோ, பொருளோ எதிர்பார்க்கவில்லை. தங்கள் வழியில் போராளிகளுடன் அணி திரண்டு போராட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்கள்.

இந்நிலையில், அவர்கள் தியாகங்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் இலட்சியங்களை வென்றெடுக்க மக்களும் அவர்கள் வழி தொடரவேண்டும். அத்தோடு மக்கள் இந்தப்போராளிகளுக்கு செய்யும் அஞ்சலிகள், இன்னும் போராளிகளுக்கு மக்கள் மீதான நம்பிக்கையை வளர்க்கும். போராட்டம் மேலும் எழுச்சிபெறும்.

## முன்பு நடத்தியவர்கள் தொடர்ந்து நடத்தலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரிய கடைப்பகுதியில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் முன்பு வியாபார ஸ்தாபனங்களை நடத்தியவர்கள், அதே இடங்களில் வர்த்தக ஸ்தாபனங்களை மீளவும் தொடர்ந்து நடத்தலாம்.

யாழ். வர்த்தக சங்கம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



எமது இந்தப் பயணத்தின் இடையில் பொதுமக்கள் கூட்டங் கூட்டமாகக் காணப்பட்டார்கள். அனைவருக்கும் இவர் மாத்தயா என்பது சந்தேகமறத் தெரிந்துவிட்டது. சில காலத்துக்கு முன்னர்தான் அப்பகுதிகள் எல்லாம் சுற்றிப் பார்த்து மக்களைச் சந்தித்திருந்தார் மாத்தயா. மக்கள் மாத்தயாவைப் பார்த்துச் சிரித்தும், கையசைத்தும் தமது நட்புணர்வை வெளிப்படுத்தினர். அப்போது பதுமன் "இந்தச் சனங்கள் சரியான மெமறிச் சனம் அண்ணே. தெனிசை செல்லப்பாவின் நிகழ்ச்சி நடந்தபோது நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும்பாட்டுத் தொடங்கியவுடனேயே நிகழ்ச்சி முடிஞ்சிட்டுது எண்டு வீட்டுக்குப் போகத் தொடங்கி விட்டுதுகள்" என்றார். மாத்தயா சிரித்துக் கொண்டார்.

போகும் வழியில் ஒரு இராணுவ முகாமிலிருந்து எம்மை நோக்கி டோர்ச் லைட் அடித்துப் பார்த்தார்கள். ஒன்றும் புரியாததாலோ, மொழியினால் வீண்வம்பு என்று நினைத்தாரோ ஒரு அசம்பாவிதமும் நடக்கவில்லை. எம்மைப் பொறுப்பேற்க வந்திருந்த குழுவினர் இடையில் ஒரு ஜீப் போயுள்ளது. இப்போது வர வேண்டாம் என்றனர். சிலவேளை திரும்பிப் போகலாமா என்றுகூட ஆராயப்பட்டது.



விசனம் இன்றிப் போராடும் நாம் எமது சொந்த மூளைகளை உபயோகித்துபுதுப் புது ஆயுதங்கள், பொறிவெடிகள் (ஜொனி போன்றவை) போன்றவற்றைக் கண்டுபிடித்துக் கொண்டோம். சூழ்நிலைதான் இக்கண்டுபிடிப்புகளுக்கான வழிகளை ஏற்படுத்தியது. ஜொனியை நாம் கண்டுபிடித்ததால் ஆயிரக்கணக்கான இந்திய வீரர்கள் உயிரிழந்தும்

**10**

காலிழந்தும் போயினர். அவர்களை இந்தியாவுக்குஅடைவைத்ததில் ஜொனியின் பங்குகணிசமானது தற்போது இலங்கை இராணுவத்தினரும் ஜொனி

தான் மிகவும் கவனமாக ஆராய்ந்தார்கள். அப்போது திரு. மாத்தயா அவர்கள் போராளிகளான நீங்கள் உங்களுடைய சாப்பாட்டில் ஒரு நேரச் சாப்பாட்டை — பொது மக்களுக்கு கொடுப்பது என்ற முடிவை எடுக்கமுடியுமா? என்பதை ஆராய்ந்து பாருங்கள். 1978ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சூறாவளியினால் சேதம் ஏற்பட்டபோது அங்குள்ள மக்கள் அகதிகளானார்கள். அப்போது எமது இயக்கத்தவர்கள் கூடி ஐயாயிரம் ரூபா கொடுப்போமா, பத்தாயிரம் கொடுப்போமா எப்படி உதவி செய்வோம் என்றெல்லாம் ஆராய்ந்தார்கள். அப்போது எமது தலைவர் 'நாம் எமது உணவில் ஒரு நேரச் சாப்பாட்டை அகதிகளுக்கென ஒதுக்குவோம் நாம் அகதிகளுக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என்பது முக்கியமல்ல. எப்படிக் கொடுக்கிறோம் என்பதே முக்கியமானது. எமது சாப்பாட்டின் ஒரு பகுதியை நாம் உணர்வு பூர்வமாகக் கொடுக்கும் உதவிதான்எமக்குஆத்மதிருப்தியைக் கொடுக்கக் கூடியது'' என்று சொன்னார். அப்போது நாம் மிகக்குறைந்த எண்ணிக்கையானவர்கள், எமது உணவுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து நாம் கொடுத்தது சில நூற்றுக் கணக்கான ரூபாய்கள்தான். ஆனால் எமக்கு அது பெரிய திருப்தியைக் கொடுத்தது என்றார் மாத்தயா. 87ஆம் ஆண்டுக்கு முதல் 36 இயக்கங்கள் இருந்தன. விடுதலைப் புலிகளால் மட்டும் இப்படி நிலைத்து நிற்க முடிந்ததற்கு என்ன காரணம் என்பது அப்போது எனக்குப் புரிந்தது.

> "அகதிகளுக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என்பது முக்கியமல்ல-எப்படிக் கொடுக்கிறோம் என்பதே முக்கியமானது."
>
> - தலைவர் வே. பிரபாகரன்.

அப்போது மாத்தயா ''திரும்பிப் போவது என்பது சரிவராது. வழியில் ஆமி கிடந்தால் நல்ல அடி கொடுத்துவிட்டுப் போவம்'' என்றார். அப்போது அவரது உறுதியின் வெளிப்பாட்டை உணர முடிந்தது. ஆனால் சென்றது செஞ்சிலுவைச் சங்க ஜீப் என்பது பின்பு தெரியவந்தது.

திரு. மாத்தயா அவர்களுக்கு சென்ற முறை எங்கெங்கு மாலை போட்டார்கள், தமது பகுதிகளுக்கு வராததற்காக எங்கெங்கு கோபித்துக் கொண்டார்கள். என்னென்ன மாதிரி வரவேற்பளிக்கப்பட்டது என்பதையெல்லாம் வழியெங்கும் போராளிகள் எனக்குக்காட்டினார்கள். 25 9 90 அன்று பி.ப 3 மணிக்கு திருமலை மாவட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மிக அண்மையிலுள்ள முகாமைச் சென்றடைந்தோம். போகும் வழியில் நின்ற மக்களிடம் மாத்தயா உரையாடினார். முந்தநாளே இங்கு உங்களை எதிர்பார்த்தோம் என்றார்கள் அந்த மக்கள். வானொலி தொலைக்காட்சிகளை விட என்னமாதிரிச் செய்தி பரவுகிறது என்று நினைத்துக் கொண்டேன்.

அவர் ஒவ்வொரு முகாமிலும் போராளிகளுடனும் குழுத் தலைவர்களுடனும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் உரையாடுவதும் ஆலோசனை நடத்துவதுமாக இருந்தார். ஒரு முகாமில் போராளிகளிடையே உரையாற்றும் போது ''இந்திய இராணுவத்துடனான மோதல் எமக்குப் பல படிப்பினைகளைத் தந்துள்ளது. எந்த ஒரு நாட்டின்உத

யினால் பாரிய அளவில் இழப்புக்களைச் சந்தித்துள்ளார்கள் ஆகவே புதுப்புது ஆயுதங்கள் பொறிவெடிகளைக் கண்டு பிடிப்பதில் ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

அத்துடன் போராட்டத்தில் காலையோ, கையையோ அல்லது வேறு எந்த அங்கத்தையோ இழந்தாலும் மனந்தளராதீர்கள் அதற்காக சயனைட் அருந்த நினைக்காதீர்கள். வாழ்வில் எந்தச் சவாலையும் சமாளிக்க வேண்டும். ஒரு காலை இழந்த இட்டு இன்று போராட்டத்தில் தன் பங்களிப்பை வழங்கவில்லையா? அதுபோல் கையையோ, காலையோ இழந்தாலும் வேறொரு துறையில் உங்களால் சாதனை புரியமுடியும்' என்று உரையாற்றினார்.

இன்னொரு முகாமில் சிறுவர்களே கூடுதலாக இருந்தார்கள். அந்த முகாமில் 'இந்திய இராணுவத்துடனான மோதலில் சிறுவர்களே பெரும் பங்கெடுத்தார்கள். எமது நெருங்கிய ஆதரவாளர்கள் பலரும், ஏன் உலகமே இந்திய இராணுவத்துடன் மோதுவது புத்திசாலித்தனமல்ல என்று கூறியபோது புதிதாக இயக்கத்தில் சேர்ந்த சிறியவர்கள்தான் இந்திய இராணுவத்தை விரட்டியடித்து சாதனை புரிந்தவர்கள். ஆகவே உங்களால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்' என்றார்.

25-9-90 அன்று தங்கிய முகாமில் குழுத் தலைவர்களுடன் உரையாடும்போது மக்களின் பட்டினி நிலையைத்

நாங்கள் இப்போது இருந்த இடத்திலிருந்து நாங்கள் புறப்பட்ட முகாமுக்கு ஒவ்வொருவரும் கால் நடையாக கால் மூடை அரிசி, சீனி என்பனவற்றைச் சுமந்து சென்றார்கள். எமது பயணத்தில் இது போன்ற காட்சிகளை அடிக்கடி கண்டேன். பத்துமணித்தியாலம் பன்னிரண்டு மணித்தியாலம் என்று சுமக்கப் போகிறார்கள், இல்லாவிட்டால் அங்கிருப்பவர்களுக்குச் சாப்பாடு இல்லை. ஒரு முறை இசி.த்திரன் ஆசிரியர் சிவா அவர்கள் தமது தலையங்கம் ஒன்றில் ''தன்மானம் மிக்க தமிழினம் சிலுவை சுமக்க நேரினும் சலுகை ஏந்தாப்பண்புடையது'' என்று குறிப்பிட்டிருந்தது நினைவுக்கு வந்தது. யேசுபிரான் வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் சிலுவை சுமந்தார். இப்போராளிகள் நாள்தோறும் சுமக்கிறார்கள். இந்தத் தியாகங்களை சிறிலங்கா அரசு நினைப்பது போல் அழித்து விட முடியுமா? இது வெட்ட வெட்டத் தழைக்கும் என நினைத்துக் கொண்டேன். (தொடரும்)

## சமுகம் தரவும்

கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களை 15 ஆம் திகதி வியாழன் காலை 8 00 மணிக்கு யாழ். நல்லூர் சாதனா பாடசாலைக்கு சமுகம் தரும்படி கிழக்குமாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

அப்போது அரசாங்க அதிபருக்கு மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்ட ஊர்வலத்துடன் மனு சமர்ப்பிக்கப்படவும் உள்ளது.

# இந்தியாவின் புதிய பிரதமராக சந்திரசேகர் பதவியேற்றார்

(டில்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக ஜனதாதள் சோஷலிசக் கட்சியின் தலைவர் சந்திரசேகர் நேற்று ஜனாதிபதி மாளிகையில் பதவியேற்றார்.

ஜனாதிபதி மாளிகைக்கு உள்ளே இருந்த வெளியில் இந்த பதவியேற்புநிகழ்ச்சி இடம் பெற்றது. ஜனாதிபதி மாளிகைக்கு வெளியே நடைபெறும் முதலாவது சம்பவம் இதுவேயாகும்.

நேற்றுக்காலை 11.00 மணிக்கு ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் பிரதமராக சந்திரசேகருக்கும், துணைப் பிரதமராக தேவிலாலுக்கும் சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார்.

நேற்று நடந்த இந்த வைபவத்தின் போது வேறு அமைச்சர்கள் எவரும் பதவியேற்கவில்லை.

இந்த நிகழ்ச்சிக்கு உபஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, பதவி விலகும் பிரதம மந்திரி வி.பி. சிங்கும், அவரது அமைச்சரவை உறுப்பினர்கள், முன்னாள் ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா, சுப்பிரமணிய சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழக முதல்வர் மு. கருணாநிதியும் பிரதமருக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இம்மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்ற மக்கள் அவையில் பிரதமர் சந்திரசேகர் கொண்டுவரவிருக்கும் நம்பிக்கை கோரும் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக பாரதிய ஜனதாக்கட்சி நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது.

சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாசாலை

## தனியார் கட்டடங்களில் வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறு மாதங்களாக சிறிலங்கா அரசின் தாக்குதல்களை அடுத்து வலிகாமம் மேற்குப் பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறிய 1000க்கும் மேற்பட்ட மக்கள் தற்போது அகதிகளாக சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் தங்கியுள்ளனர். தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமையால் மேற்படி பாடசாலை பின்வரும் இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

சங்கானை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம், மாவடி தனியார் கல்வி நிலையம் நாகலிங்க சுவாமிகள் மண்டபம், அரிசி ஆலை, ஐக்கிய நலன்புரிச் சங்கம் மற்றும் இரண்டு தனியார் வீடுகள் உட்பட பாடசாலையின் ஒரு சில கட்டடங்கள் ஆகியவற்றில் நாளை திங்கள் முதல் வகுப்புக்கள் காலை 8.30முதல் 12.30 வரை நடைபெறும் எனவும் தினமும் ஐந்து பாடங்கள் நடைபெறும் எனவும் சகல மாணவர்களையும் திங்களன்று பாடசாலைக்குச் சமுகமளிக்கும்படியும் அதிபர் கேட்டுள்ளார். (ச)

## ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

சுருங்கிய பாடத்திட்டக் கருத்தரங்கு நாளை 12ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதிவரை அந்தந்த கோட்டங்களில் நடைபெறும். ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 12ஆம்திகதி நடைபெறும் பாடங்கள் சம்பந்தமான விபரம் கீழே தரப்படுகிறது.

இராமநாதன் கல்லூரி தமிழ், கணிதம், விஞ், சமூ, வர்த்தகமும் கணக்கீடும் கவின்கலைகளும், உடற்கல்வியும் சுகாதாரமும் மானிப்பாய் இந்துக்கல்லூரி - தமிழ் கணிதம், சமூகக்கல்விநீர்வேலி அத்தியார் இந்து- தமிழ். கணிதம் விஞ், சமூக, புத்தூர் சோமாஸ்கந்தா- தமிழ், கணிதம், சமூ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி- கணிதம், விஞ், சமூ, வர்த்தகமும் கணக்கியலும், கவின்கலையும் சுழிபுரம் விக்டோரியா- விஞ், சமூ அளவெட்டி அருணோதயாக்கல்லூரி- கணி, விஞ் சுத்தவரோதயக்கல்லூரி- கணி நெல்லியடி ம.ம. வித்- கணி விஞ் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி-கணி யாழ். இந்து மகளிர் கல்லூரி- கணி, விஞ் சாவகச்சேரி இந்துக் கல்லூரி- கணி விஞ்,சமூ வேலணை சேர். துரைசாமி ம.ம.வி- தமிழ், கணி,விஞ், சமூ யாழ். திருக்குடும்பக்கன்னியர்மடம்- சமூ, தமிழ் புங்குடுதீவு மகாவித்-சமூக வரணி மகாவித்- சமூக வேலாயுதம் ம.வி- சமூ உசன் ம.வி-சமூ

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### நாகமுத்து சபாபதிப்பிள்ளை

கரம்பன் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்த திருமதி நாகமுத்து சபாபதிப்பிள்ளை 08-11-90 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், யோகம்மா, நித்தியானந்தன் (மே. ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், குணரெத்தினம், குருதேவி (மே. ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கலாநிதி, பிறேமலோஜினி, பிறேமலதா (ஆசிரியை, நொச்சிமோட்டை அ.த.க. பாடசாலை), கலைவதனி (மாணவி, யா/இந்து மகளிர் கல்லூரி), அமுதாகரன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 09 - 11 - 90 வெள்ளிக்கிழமை பிற்பகல்3:00 மணியளவில் லோட்டஸ் வீதி, ஆறுகால்மடம் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு கோம்பையன்மணல் மயானத்தில் தகனம்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டஸ் ரோட்,
ஆறுகால்மடம்.

தகவல்: பிள்ளைகள்
(B/1579)

### இஸ்தாக்கி அல்பேட்

இஸ்தாக்கி அல்பேட் (யக்கடையா மெக்கானிக்) (10 - 11 - 90) சனிக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-11-90 இன்று ஞாயிறுகாலை 10மணி அளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: அல்பேட் மேசி அஞ்சலா
(யாழ். சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை ஆசிரியர்)

(B/1582)

## பல்கலைக்கழகத்தில்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் நாளை காலை 9.00 மணியளவில் பல்கலைக்கழக ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

மறுமலர்ச்சிக் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர்களும் கலந்துகொள்வார்கள்.

### நெடுந்தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7.45 மணியளவில் புங்குடுதீவு தென் கரையில் (கண்ணகி அம்மன்கோயிலடி) கரை ஒதுங்கியது. சடலம் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்படகில் பயணஞ் செய்த சி. இரத்தினம் என்பவர் நீந்திக்கரை சேர்ந்துள்ளார். ஏனைய மூவரின் நிலைபற்றி இதுவரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. (மு)

### வடக்கு-கிழக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் இந்த அகதிகளுக்கும் உதவி வழங்கத் தாம் விரும்புவதாகவும் அந்தத் தூதுக்குழு தெரிவித்தது.

இந்தத் தூதுக்குழுவிற்கு அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அகதிகள் உதவிப் பிரிவின் பிரதி உதவிச் செயலாளர் திருமதி சராயி மோற்றென் தலைமை தாங்கினார்.

### ஆஸ்பத்திரி வளாகக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இக்குண்டு வீச்சுச் சம்பவத்திற்கு சாட்சியாக இல்லாவிடில், அரசாங்கமும், அதன் தொடர்புச் சாதனங்களும் இப்படியான ஒரு சம்பவம் நடைபெறவில்லை என வழமையான பாணியில் மறுத்திருக்கும் என்றும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

### காரியாலயத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரியாலயத்திற்கு 13-11-90 செவ்வாய்க்கிழமை பகல்10-00 மணியளவில் சந்திக்குமாறு வடபிராந்தியமினிபஸ் சேவை சங்கத் தலைவர் பொன். மதிமுகராஜா தெரிவித்துள்ளார்.

### கிருஷ்ணானந்தன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும். பேராசிரியர் வி. நித்தியானந்தன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார் அமரர் கிருஷ்ணானந்தன் நினைவுப் பணி மன்றம் இந் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது.

# சண்டிலிப்பாயில் புலிகளுக்கு மக்கள் கண்ணீர் அஞ்சலி

(சண்டிலிப்பாய்)

வீரவேங்கைகள் நால்வருக்கு ஒரேமேடையில் வைத்து மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த மூன்றாம் திகதி மாவிட்டபுரம் வீமன்காமம் மினிமுகாம் தகர்ப்பின்போது காயமடைந்து எட்டாம் திகதி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட கப்டன் செந்தில் (மாதகல்), அன்றைய தினம் வயாவிளான் நேரடி மோதலில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் சிரஞ்சீவி (சுன்னாகம்), மற்றும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வீரவேங்கைகள் பல்லவன் (சுப்பிரமணியம் அனுஷானந்தன், இணுவில்), லோலோ (உடையார் மகாராஜா, அளவெட்டி) ஆகியோரது பூதவுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக சண்டிலிப்பாய் சைவ வித்தியாசாலையில் நேற்றுக் காலை 9 மணிமுதல் 12 மணிவரை வைக்கப்பட்டது.

பெருந்திரளான ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் இந்த வீரவேங்கைகளுக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

பின்னர்இந்தப்பூதவுடல்கள் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் பெருந்திரளான மக்கள் கூடிநின்று கண்ணீர் சிந்த அக்கினியுடன் சங்கமமாகியது. (ச)

## செல்லுபடியாகும்

யாழ். பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட சம்பளக் காசோலைகள் யாவும் எதிர்வரும் டிசம்பர் முப்பத்தோராம் திகதிவரைக்கும் செல்லுபடியாகும் என யாழ் பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (மு)

### சூழலுக்கேற்ற

றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிராந்தியக்கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் எந்த கஷ்டமான சூழலிலும் கல்வியைக் கை விடக்கூடாது என்றும் கல்வியின் பின்னடைவை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் கூறினார். இவ்வைபவத்தில் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். தொலைக்கல்விப்பயிற்சிநெறியில் சித்தியடைந்த பதினாறு பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (க)

### பேச்சு நடத்த

மருந்துப்பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற அதேவேளை வைத்தியசாலை வாகனங்களுக்கும், ஜெனரேட்டர்களுக்கும் தேவையான எரிபொருள்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. வைத்தியசாலையின் தேவைகளுக்கு நாளொன்றுக்கு ஒரு பீப்பா டீசல் தற்போது தேவைப்படுகிறது. (க)

### நயினாதீவில்

புங்குடுதீவு, குறிகட்டுவான் பகுதியை நோக்கி ஏவப்படுவதும், அவை கடலிலும் ஊர்மனைகளிலுமாக வீழ்ந்து வெடிப்பதும், இவ்வாறு வெடிக்கும்போது ஏற்படும் பாரிய சத்தத்தைக் கேட்டு இப்பகுதி மக்கள் பீதி அடைவதும் நாளாந்தம் நடைபெறும் நிகழ்ச்சிகளாகி விட்டன. மேலும் கடல் தொழிலில் ஈடுபட்டிருப்போர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவது, சோதனைக்காகச் செல்லும் பயணிகள் படகுகளில் சிலர் தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் இடைக்கிடையே நடைபெறுகின்றன. (22)

### குடும்பத்துடன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலரது வீடுகளும், உடைமைகளும் அழிக்கப்பட்டு விட்டன,

அத்துடன் குடாநாட்டின் பல பகுதிகள் மீது நிகழ்த்தப்படும் குண்டு வீச்சினாலும், ஷெல் தாக்குதல்களினாலும் பலரது வீடுகளும், சொத்துக்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. மேலும் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்தும் பெரும்பாலான மக்கள் தமது வீடுகள், சொத்துக்களை இழந்த நிலையில் குடாநாட்டிற்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டவர்களாக, விடுபட்டவர்களாக சிலர் தம்மைக் கருதிக்கொண்டும் எமது மக்களின் எதிர்கால தலைவிதியை நிர்ணயிக்கும் இந்த உரிமைப் போரில் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டி இன்றைய வரலாற்றின் கட்டாயத்தில் தமது சமூகக் கடமைகளை மறந்தும் தமது வசதி வாய்ப்புக்களைப்பயன்படுத்திச் சிலர் குடும்பமாகவேவெளிநாடுசெல்கின்றனர். இன்னும்சிலர் குடும்பத்திலுள்ள வயோதிபர்களை மட்டும் இங்கு நிறுத்திவிட்டு வெளிநாடு செல்கின்றனர். இவர்கள் வெளிநாடு செல்லும்பொழுது தமது வீடுகள், சொத்துக்கள், விவசாய நிலங்கள் என்பவற்றைக் கண்காணிப்பதற்கு உறவு முறையான வயோதிபர்களை வீடுகளில் குடியமர்த்திவிட்டுச் செல்கின்றனர்.

இன்னும் சிலர் வெற்றிடமாக இருக்கும் வீடுகள் சிலவற்றை நாம் பொறுப்பேற்க உள்ளோம் என்பதனை அறிந்தவுடன் வசதி வாய்ப்பாக வசித்து வருபவர்களைக் கூட சிலவேளைகளில்அங்குஇடைக்காலத்திற்குக் குடியமர்த்துகின்றனர்.

இன்றைய போர்க்கால நெருக்கடியில் தமிழீழப் பிரதேசங்களில் உடனடியான புனரமைப்பு,நிவாரணவேலைகளை மேற்கொள்ள முடியாது என்பதனால் இப்படிப்பட்ட வீடுகளை நாம்பொறுப்பேற்று வீடுகளை, சொத்துக்களை இழந்துதவிப்பவர்களை இந்த வீடுகளில் தற்காலிகமாக குடியமர்த்தி வருகின்றோம்.

எனவே எமது சமூகத்திற்கு இன்று ஆற்ற வேண்டிய கடமையை மறந்து வெளிநாடு செல்பவர்கள் இன்றைய போர்க்கால தேவையைக் கருத்திற் கொண்டு வீடுகளையும் விவசாய நிலங்களையும் தற்காலிகமாக எம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் எமது பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் நோக்கில் சிறிலங்கா அரசானது திட்டமிட்ட முறையில் உணவுப் பயிர்ச்செய்கையை விருத்தி செய்யும் உர வகைகள், எரிபொருள் ஆகியவற்றின்மீது கடுமையான தடையை அமுல்படுத்திவருகின்றது. இதிலிருந்து விடுபட நாம் எல்லோரும் உள்ளூர் வளங்களை பயன்படுத்திப் பயிர்ச்செய்கையை விருத்திசெய்யப் பழகிக் கொள்ள வேண்டும். பயிர் செய்யாமலிருக்கும் பயிர்ச்செய்கை நிலங்களை இடம் பெயர்ந்தவர்களுக்குத் தற்காலிகமாக வழங்கிப் பயிர்ச்செய்கையிலீடுபடுத்த அவற்றையெம்மிடம் தற்காலிகமாக பொறுப்புத்தரும்படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு வம்பர் மாதம் 11 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது